பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

03 10 2024 7 15

செய்தி ஆசிரியர்

வியாழக்கிழமை இரவு ஜெ. காமராஜ் வணக்கம்,

ஆகாஷவாணி

செய்திகள் - வாசிப்பவர் - லஷ்மி ராகவன்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

2. சுகாதார சேவைகளை மக்களுக்கு விரைவாக வழங்குவதில் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. நாட்டின் வளர்ச்சியில் வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்களிப்பு அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. இஸ்ரேல் நடத்திவரும் வான்வழி தாக்குதல் காரணமாக, லெபனானில் இருந்து 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வெளியேறியுள்ளனர்.

5. ஆசிய **Rugby** சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

<u>ஹரியானா – பிரச்சாரம்</u>

ஹரியானா மாநிலத்தில் நாளை மறுநாள் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு இன்று மாலை ஐந்து மணியுடன் பிரச்சாரம் முடிவுக்கு வந்துள்ளது.

90 தொகுதிகளில் நடைபெறவுள்ள வாக்குப்பதிவுக்கு தேவையான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்டு செல்லும் பணியில் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை வரும் 8ஆம் தேதியன்று நடைபெறுகிறது.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கும், அன்றைய தினம் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

இதனிடையே, ஜம்மு காஷ்மீரில் மூன்று கட்டங்களாக நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் 63 புள்ளி எட்டு எட்டு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு – பஞ்சாயத்து தேர்தல்

ஜம்மு காஷ்மீரில் பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் ஏற்பாடுகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தல் அமைதியாக நடைபெற்று முடிந்த நிலையில், இந்த ஆண்டு இறுதிக்குள் ஜம்மு காஷ்மீரில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்காக பணியமர்த்தப்பட்ட பாதுகாப்புப்படையினர், வரும் டிசம்பர் மாதம் வரை அங்கு தொடர்ந்து பணியில் இருப்பார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பிரதமர் - நம்பிக்கை

வலிமைமிக்க நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, உலக நாடுகளின் பார்வை தற்போது இந்தியாவை நோக்கி திரும்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகமே தற்போது இந்தியாவை எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் பார்ப்பதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆயுஷ்மான் பாரத் - 3 ஆண்டு

சுகாதார சேவைகளை மக்களுக்கு விரைவாக வழங்குவதில் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த இயக்கத்தின்கீழ், புறநோயாளியாக சிகிச்சை பெற ஐந்து கோடிக்கும் மேற்பட்டோர் பதிவு செய்து ஆவணங்களை பதிவேற்றம் செய்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கோயல் - இந்தியர்கள்

இந்தியாவின் வளர்ச்சியில் வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்கேற்பு அவசியம் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள அவர், நியூயார்க்கில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது, இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள அமெரிக்க தொழில் அதிபர்கள் முன்வர வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தொழில் தொடங்குவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவதற்கும், கட்டமைப்பு வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

ஜிதேந்திரா – கர்மயோகி

உலக அளவில் போட்டியிடும் வகையில் நாட்டை மேம்படுத்துவதற்கு உறுதியான விதிமுறைகள் அவசியம் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று கர்மயோகி திட்டம் குறித்த கருத்தரங்கில் பேசிய அவர், இந்தியாவின் ஆட்சிமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்துடன் கூடிய அணுகுமுறை ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டு வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கினை அடைவதற்கு பங்களிப்புக்கு உரிய விதிமுறைகள் என்ற நிலையை எட்ட வேண்டியது அவசியம் என்றும் திரு ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

தெலங்கானா – சுகாதார அட்டை

தெலங்கானா மாநிலத்தில் முன்னோடி திட்டமாக குடும்ப சுகாதார அட்டைகளை டிஜிட்டல் முறையில் வழங்கும் திட்டத்தை அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி இன்று தொடங்கிவைத்தார்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த தகுதிவாய்ந்த நபர்களுக்கு சுகாதார வசதிகள் அளிப்பதுடன் இந்த அட்டைகள் மூலம், ரேஷன் பொருட்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஜெய்சங்கர் - இலங்கை

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், ஜெர்மன் அதிபரின் பாதுகாப்பு ஆலோசகர் திரு **Jens Plotner** –ஐ புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், இந்த சந்திப்பின்போது, இந்தியா – ஜெர்மனி இடையே நடைபெறவுள்ள அரசு நிலையிலான ஆலோசனை கூட்ட முன்னேற்பாடுகள் குறித்து விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, திரு ஜெய்சங்கர் நாளை இலங்கை செல்கிறார்.

இலங்கை அதிபராக திரு அனுரா குமார திசநாயகே பொறுப்பேற்ற பின்னர், முதல் முறையாக கொழும்பு செல்லும் வெளியுறவு அமைச்சர், அந்நாட்டுடனான இந்தியாவின் நல்லுறவை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

அதிபரை சந்தித்த பின்னர், இலங்கை பிரதமர் திருமதி ஹரிணி அமரசூரியாவையும் சந்தித்து, திரு ஜெய்சங்கர் பேச்சு நடத்தவுள்ளார்.

மாநில அரசு – தொழிற்சாலை

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 46 புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இந்த காலக்கட்டத்தில், ஒன்பது லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் 31 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்துறை வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாமக்கல் - விருது

ஆன்மிக மற்றும் ஆரோக்கிய சுற்றுலாவுக்கான சிறந்த கிராமமாக தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம் மேல்கலிங்கம்பட்டி கிராமம் தேர்வு செய்யப்பட்டு மத்திய அரசின் சுற்றுலா விருதை பெற்றுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற உலக சுற்றுலா தின நிகழ்ச்சியில், இந்த விருதை பெற்றது மகிழ்ச்சி அளிப்பதாக அரியூர்நாடு ஊராட்சிமன்றத் தலைவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - நாகலிங்கம் - 48 செகண்ட்ஸ்)*

லெபனான் - வெளியேற்றம்

இஸ்ரேல் நடத்திவரும் வான்வழி தாக்குதல் காரணமாக, லெபனானில் இருந்து 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வெளியேறியுள்ளனர்.

லெபனான் அமைச்சரவைக்கூட்டத்தில் இதனை தெரிவித்த அந்நாட்டு அரசு, வெளியேறியவர்களில் பெரும்பாலானோர் தங்கள் குடும்பத்தினருடன் வேறு பகுதிகளுக்கு குடிபெயர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

விமான தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக அரசு மற்றும் தனியார் அலுவலக கட்டிடங்களில் அவர்கள் தஞ்சமடைந்திருப்பதாகவும், மேலும் பலர் சிரியாவுக்கு சென்றிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**Hezbollah** அமைப்பினரின் நிலைகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பெய்ருட்டில் இஸ்ரேல் ராணுவத்தினர் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறார்கள்.

தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் இஸ்ரேல் படையினரின் தரைவழி தாக்குதலால் அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

வியட்நாம் - பறவைக்காய்ச்சல்

பறவைக்காய்ச்சல் நோய் காரணமாக வியட்நாம் மிருக காட்சி சாலையில் 12 புலிகள், மூன்று சிங்கங்கள் மற்றும் ஒரு சிறுத்தை உயிரிழந்துள்ளன.

**'Dong Nai '** –மாகாணத்தில் உள்ள இந்த மிருக காட்சி சாலையில் உயிரிழந்த விலங்குகளின் ரத்த மாதிரியை பரிசோதனை செய்ததில், பறவைக்காய்ச்சல் நோய் உறுதி செய்யப்பட்டிருப்பதாக வியட்நாம் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த விலங்குகளுக்கு அளிக்கப்பட்ட கோழி இறைச்சி உணவிலிருந்து தொற்று பரவியிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பங்குச்சந்தை – சரிவு

பங்குச்சந்தைகளில் தொடர்ந்து நான்காவது நாளாக இன்றும் சரிவு காணப்பட்டது.

அனைத்து துறைகளிலும் பங்குகள் விற்பனை அதிக அளவில் நடைபெற்றதால், கடந்த இரண்டு மாதங்களில் இல்லாத வகையில் இன்று தேசிய மற்றும் மும்பை பங்குச்சந்தைகள் வீழ்ச்சியுடன் நிறைவடைந்தன.

பங்கு வர்த்தகம் நிறைவடைந்தபோது, சென்செக்ஸ் குறியீடு ஆயிரத்து 769 புள்ளிகள் குறைந்து, 82 ஆயிரத்து 497-ஆக இருந்தது.

தேசிய பங்குச்சந்தையான நிஃப்டி குறியீட்டெண் 546 புள்ளிகள் குறைந்து, 25 ஆயிரத்து 250-ஆக முடிந்தது.

இது சுமார் இரண்டு புள்ளி ஒன்று சதவீத வீழ்ச்சியாகும்.

மேற்காசியாவில் நிலவும் போர் பதற்றம் காரணமாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பங்குச்சந்தை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டுச் செய்திகள் -1

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய **Rugby** சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆடவர் பிரிவிற்கு **Mohit Khatri**–யும், மகளிர் பிரிவிற்கு **Shikha**-வும் கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.
இப்போட்டி காட்மாண்டுவில் நாளை தொடங்குகிறது.

-----------

உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி, ஐக்கிய அரபு எமிரேட்டில் இன்று தொடங்கியது.

முதல் ஆட்டத்தில் ஸ்காட்லாந்து அணியை 16 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷ் வென்றது.

(C/O டாஸ் வென்று முதலில் விளையாடிய பங்களாதேஷ், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 119 ரன் எடுத்து.

120 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஸ்காட்லாந்து அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 103 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

விளையாட்டுச் செய்திகள் -2

இந்திய மகளிர் அணி நாளை நியூசிலாந்து அணியை எதிர்கொள்கிறது. C/O)

--------------

உலக ஜூனியர் டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shukla** வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்தார்.
தென்கொரியாவின் **Chuncheon**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 51 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------